இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 18-06-2024

# புதுமைப் பெண்ணும் தமிழ்ப் புதல்வனும்

**“அரசுப் பள்ளியில் பயின்று கல்லூரிக் கல்விக்குள் பயில வரும் மாணவியருக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தைப் போல, அரசுப் பள்ளியில் பயின்று கல்லூரிக் கல்விக்குள் பயில வரும் மாணவர்க்கும் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம் வருகிற ஆகஸ்ட் மாதத்தில் இருந்து தொடங்கப்படும்”** என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டங்கள்தான், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் ஆகிய திட்டங்கள் ஆகும். **‘தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டங்களை மட்டுமல்ல; சொல்லாத பல திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது’** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது இதுபோன்ற பல திட்டங்களை மனதில் வைத்துத்தான்.

**‘புதுமைப் பெண்’ திட்டமானது 05.09.2022 அன்று சென்னையில் பாரதி மகளிர் கல்லூரியில் துவங்கப்பட்டது. டெல்லி மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் வருகை தந்திருந்தார்கள். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர் கல்வித் திட்டமாக இது தொடங்கி வைக்கப்பட்டது. அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர் கல்விச் சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் மகத்தான திட்டம் இது. எந்த நோக்கத்துக்காக இது தொடங்கப்பட்டதோ அந்த நோக்கத்தை முழுமையாக அடைந்துள்ளது இந்தத் திட்டம்.**

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டப்படி 4.81 லட்சம் மாணவிகள் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். குடும்ப சூழல் காரணமாக பணம் செலவு செய்ய முடியாத நிலை சில மாணவியருக்கு இருந்திருக்கிறது. அரசாங்கமே ஆயிரம் ரூபாய் தருகிறது என்பதை தனது பெற்றோரிடம் சொல்லி அடம் பிடித்து இப்போது கல்லூரியில் பல மாணவியர் சேர்ந்துள்ளார்கள். ஓராண்டாக கல்லூரிக்குச் செல்லாத சில மாணவியர், இந்த திட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அதன்பிறகு கல்லூரியில் சேர்ந்துள்ளதாகப் பேட்டி அளித்துள்ளார்கள்.

கல்லூரி மாணவியரின் உயர் கல்விச் சேர்க்கையானது அதிகமாகி வருகிறது. இந்தத் திட்டமானது தொடங்கப் பட்டதும் முதல் ஆண்டில் 12 விழுக்காடு மாணவியரின் கல்லூரிச் சேர்க்கை அதிகம் ஆனது. இரண்டாவது ஆண்டில் 34 விழுக்காடு அதிகம் ஆகி இருக்கிறது. 12 ஆம் வகுப்போடு மாணவியரின் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைக்கும் ஏழை எளிய குடும்பத்து பெற்றோர், இத்திட்டத்துக்குப் பிறகு தங்கள் பிள்ளைகளை கல்லூரியில் சேர்க்க முன்வந்துள்ளார்கள். இதை விட இத்திட்டத்தின் பயன்பாடு வேறு இருக்க முடியாது.

இந்தத் திட்டத்தை தொடக்கி வைத்த அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கனவுகளைப் பதிவு செய்தார்கள். **“பள்ளியுடன் படிப்பை நிறுத்தி விடும் பெண்ணுக்கு ஆயிரம் ரூபாய் கிடைப்பதால், அவர் கல்லூரிக்குள் நுழைகிறார். இதன் மூலமாக தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி அதிகமாகும். படித்தவர் எண்ணிக்கை அதிகமாகும். அறிவுத்திறன் கூடும். திறமைசாலிகள் அதிகமாக உருவாகுவார்கள். பாலின சமத்துவம் ஏற்படும்.**

**குழந்தை திருமணங்கள் குறையும். பெண் அதிகாரம் பெறுவாள். சொந்தக் காலில் பெண்கள் நிற்பார்கள். - இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். திராவிட மாடல் ஆட்சியின் மையக் கரு என்பது இதுதான். அனைவர்க்குமான வளர்ச்சியின் உள்ளடக்கம் என்பது எல்லார்க்கும் எல்லாம் என்பதாகும். அதனை மனதில் வைத்துத்தான் புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது”** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவை அனைத்தும் நிறைவேறி வரும் காட்சியைத்தான் இன்று தமிழ்நாட்டில் நாம் பார்க்கிறோம்.

பெண் குழந்தைகளின் உயர்கல்வி உறுதிப்படுத்தப்படுவதோடு பொருளாதார சுதந்திரம், தன்னிறைவு, பாலின சமத்துவம் ஆகியவற்றிலும் அவர்கள் நிறைவு பெறுகிறார்கள். மாணவிகளுக்குப் பொருளாதாரம் சார்ந்த உதவியுடன் கல்வி, இடை நிற்றல் விகிதத்தைக் குறைத்து நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இத்திட்டம் முக்கியமான திட்டமாக அமைந்து வருகிறது. படிக்க வைக்க பணமில்லை, மனமில்லை என்ற இரண்டு தடைகளையும் இந்தத் திட்டம் உடைத்து விட்டது. பெண் கல்வியை அதிகரிக்கும் திட்டமாக மட்டுமல்ல, பெண் சக்தியை அதிகரிக்கும் திட்டமாகவும் இது அமைந்துவிட்டது.

‘மாணவியருக்கு மட்டும் தானா? மாணவர்க்கு இல்லையா?’ என்ற கோரிக்கையும் முதலமைச்சர் அவர்களுக்கு வந்தது. இதனை ஏற்று ஆகஸ்ட் மாதம் முதல் மாணவர்களும் பெறப் போகிறார்கள். அரசுப் பள்ளி மாணவர்களின் உயர் கல்விச் சேர்க்கையானது வரும் ஆண்டு முதல் அதிகமாக இருக்கிறது. இது மாணவர் சமுதாயத்தின் வாழ்க்கையிலும் மறுமலர்ச்சியை உருவாக்கத்தான் போகிறது. இளையோர் சக்தியும் வருங்காலத்தில் அதிகமாகும்.

**“மாணவச் செல்வங்கள், படிப்பதற்கு சமூகமோ, பொருளாதாரமோ, அரசியல் சூழ்நிலையோ எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்பதே திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை ஆகும்.” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார். அத்தகைய தடைகளை உடைக்கும் திட்டமாகவே தமிழ்ப்புதல்வன் திட்டம் அமையப் போகிறது.**

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்!

சென்னை, ஜூன் 18 –

தாம்பரம் மாநகரம், பம்மல் தெற்கு பகுதிக்குட்பட்ட பகுதிகளில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இதில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார், பம்மல் தெற்கு பகுதி நிர்வாகிகள் ப.காளேஸ்வரன், ஆர்.உமா சங்கர், என்.பன்னீர்செல்வம், துரை. இளங்கோவன், பா.கவிதா, பா.டில்லி, பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்திரன், ரா.கோகுல், சு.மனோகர் ஆகியோர் பங்கேற்றனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களுக்கு பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

### தேனி நாடாளுமன்றத் தொகுதி கழக உறுப்பினர்

## தங்க தமிழ்ச்செல்வன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

### கழக நிர்வாகிகள், ‘இந்தியா’ கூட்டணிக் கட்சியினர் பங்கேற்பு!

தேனி, ஜூன் 18 –

தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி பின்வருமாறு நடைபெறுகிறது.

18.06.2024 – ஓடைப்பட்டி பேரூர் மாலை 4.00 மணி, சின்னமனூர் நகரம் மாலை 5.00 மணி, மார்க்கையன்கோட்டை பேரூர் மாலை 6.00 மணி, குச்சனூர் பேரூர் மாலை 6.30 மணி.

19.06.2024 – கூடலூர் நகரம் மாலை 4.00 மணி, கே.கே.பட்டி பேரூர் மாலை 5.00 மணிக்கு நன்றி அறிவிப்பை முடிக்கிறார்.

இதில் தேனி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், ‘இந்தியா’ கூட்டணிக் கட்சியினர் பங்கேற்கின்றனர்.



‘இந்தியா’ கூட்டணி தமிழ்நாட்டில் நாற்பது இடங்களையும் கைப்பற்றியதையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை அவரது முகாம் அலுவலகத்தில் ‘சட்டக் கதிர்’ ஆசிரியரும் வழக்கறிஞருமான வி.ஆர்.எஸ்.சம்பத் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை! அண்ணா அறிவாலயத்தில் நாளை

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் இல்ல மணவிழா: கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – இல.பத்மநாபன் முன்னிலை! அமைச்சர் பெருமக்கள் வாழ்த்து!

சென்னை, ஜூன் 18 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திருப்பூர் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணித் தலைவர் கே.செல்வராஜ் ஆகியோரின் புதல்வர் எஸ்.கே. திலிபனுக்கும், இராமநாதபுரம் மாவட்டம், ஏ.எம். ராமகிருஷ்ணன் கே.கே.கீதா (எ) ரோஜா ஆகியோரின் புதல்வி ஆர்.ஜி.ஜனனி ஆகியோரின் மண விழா நாளை (19.6.2024 - புதன்கிழமை) காலை 9.30 மணிக்கு, தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மண விழாவினை கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மண விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மண விழாவில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் பொறுப்பாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் ஆன்றோர், சான்றோர், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மண விழாவில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நன்றி கூறுகிறார்.

### ‘நீட்’ தேர்வு குளறுபடிகளுக்கு கடும் கண்டனம்!

## ‘நீட்’ நுழைவுத் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்திட வேண்டும்!

### கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன் 18 –

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (17.06. 2024) காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக சட்டத்துறை அலுவலகத்தில் கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், ஈரோடு ராதா கிருஷ்ணன், கே.எம்.தண்டபாணி, துணைச் செயலாளர்கள் ஜெ. பச்சை யப்பன், கே.சந்துரு, வி.வைத்திய லிங்கம், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ப.கணேசன், சூர்யா வெற்றிகொண்டான், கே.ஜெ.சரவணன், வீ.கவிகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:–

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இந்திய துணைக் கண்டமே வியந்து நோக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் உள்ள 40 தொகுதிகளிலும் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்கள் அதிக வாக்கு வித்தியாசத் தில் மாபெரும் வெற்றிபெற வியூகம் அமைத்ததோடு, அவ்வெற்றிக்கு பாடுபட்ட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கும் நாடாளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக பிரச்சாரம் செய்து, பாசிச பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை படுதோல்வி அடையச் செய்து, ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்திட, பாடுபட்ட தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் – விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தேர்தல் ஆணையத்திற்கு வலியுறுத்தல்!**

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட EVM இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து இன்று நாடு முழு வதும் பேசுபொருளாக மாறியிருக்கும் இச்சூழ்நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் EVM செயல்பாடுகள் குறித்து, பொதுவெளியில் விவாதிக்க வேண்டுமென, இந்திய தேர்தல் ஆணையத்தை இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

‘நீட்’ நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்திய போதிலிருந்தே, அது ஏழையெளிய கிராமப்புற மாணவர்களுக்கு எதிரானது என்று அறிக்கைகள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கையெழுத்து இயக்கங்கள் ஆகியவற்றை தொடர்ந்து நடத்தி, அதனை எதிர்த்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் கூற்று மெய்ப்பிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற ‘நீட்’ தேர்வு குளறுபடிகளுக்கு தி.மு.க. வழக்கறிஞர் அணியின் இக்கூட்டம் தனது கண்டனத்தை பதிவு செய்வதோடு, ‘நீட்’ நுழைவுத் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்திட வேண்டுமென என இக்கூட்டம் பிரதமரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**விக்கிரவாண்டி இடைத்தேர்தல்!**

வருகிற ஜூலை 10ஆம் தேதி அன்று நடைபெற விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில், கழக நிர்வாகிகளுக்கு உறுதுணையாக இருப்பதுடன், அவர் களுக்கு தேவைப்படும் அனைத்து சட்ட உதவிகளை வழங்கி, சிறப்பாக செயல்பட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் நி ர் வ ா கி க ளை யு ம் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தி.மு.க. வழக்கறிஞர் அணியின் செயல்பாடுகளை மேலும் செம்மைப்படுத்திடவும், இதுவரை நடைபெற்ற பணிகள் குறித்து ஆய்வு செய்திடவும், மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டம் வருகிற ஜூலை 21ஆம் தேதி நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**ஆங்கில வழியில் கருத்தரங்கம்!**

அண்மையில் கழக சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் சர் பிட்டி. தியாகராயர் அரங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கம் ஆங்கில வழியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை நம்முடைய கழகத் தலைவர் அவர்கள், வெகுவாக பாராட்டியதோடு மட்டுமல்லாமல், இதேபோன்ற கருத்தரங்குகளை தமிழ்நாடு முழுவதும் நடத்திட வேண்டுமென, கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தியதன் அடிப்படையில், மாநிலத்தில் உள்ள ஏழு மண்டலங்களில், தலா ஒரு கருத்தரங்கம் நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தென்காசி வடக்கு மாவட்டம் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் குருக்கள்பட்டி அபிஷேக் மகாலில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார் இல்ல மணவிழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தலைமையேற்று மணமகன் மதிச்செல்வம், மணமகள் சிந்துஜா ஆகியோரின் சுயமரியாதை திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்கள். உடன் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா, தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி. உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.